**ஜனவரி - 17**

**"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்." - யூதா 21**

நாம் அனுதினமும் எல்லா வேளைகளிலும் கிறிஸ்து யேசுவினுடைய இரக்கத்தைப் பெறவேண்டுமென்றால், கீழ்ப்படிதலின் மூலம் பெறலாம். அவருடைய நீதியின் அடிப்படையான உண்மைகளின் பேரில் நமக்கு அன்பும் கீழ்ப்படிதலும் வளர வேண்டும். வாழ்க்கையில் நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு அனுபவத்திற்காகவும் நாம் சந்தோஷப்பட வேண்டும். அதின் சோதனைகளிலும், உபத்திரவங்களிலும், துக்கங்களிலும், ஏமாற்றங்களிலும் இது போன்று ஏதுவாக இருப்பினும் இதுபோன்ற அனுபவங்களுக்காக நாம் மகிழ வேண்டும். இவற்றால் கிடைக்கும் ஆனந்தத்தைவிட இவற்றின் மூலமாக நமதாண்டவர் நமக்குப் பல அறிவுரைகளைக் கொடுக்கலாம். நம் வாழ்க்கையில் மறைந்து கிடைக்கும் குறைபாடுகளைத் தெளிவாக எடுத்துக்காட்ட உதவலாம். அதன்படி பரிபூரண சுயாதீனம் அன்பு என்பதையும் அதில் அவர் எவ்வளவு நிலைத்து நிற்கிறார். இவற்றிற்கு நமதாண்டவர் நம்மிடம் முழுமையும் இதயப்பூர்வமான கீழ்ப்படிதலையும் எதிர்பார்க்கிறார். **- Z ’02, 173 (R 3021).**

தேவனுடைய அன்பு பாரபட்சமற்றது. அது முழு மனதோடும் முழு இருதயத்தோடும் பிதாவிற்கும் குமாரனுக்கும் செலுத்தும் அன்பாகும். அது நம் சகோதரருக்குக் காட்டும் அன்பு . இன்னும் கூடுதலாக கூறுவதென்றால் மனுகுலத்திற்குப் பொதுவாகக் காட்டும் அன்பைக் காட்டிலும் கூடுதல். நமக்கோ நம் எதிராளிக்கோ செலுத்தும் அன்பிலும் பெரிதானது. இப்படிப்பட்ட பாரபட்சமற்ற அன்பு இன்றைய சூழ்நிலைகளில் நம் இருதயங்களில் குடிகொள்வதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இவ் அன்பை காத்துக்கொள்ளாதவன், நிச்சயமாக வேறு மோசமான நிலைகளில் இதனை இழந்து போவான். ஆகவே தேவ அன்பை நாம் பெற்றிருப்போமாகில் இதனை காத்துக்கொள்ள அதற்குரிய வழி முறைகளைத் தேடுவோமாக. **-P ’34, 189.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**உபா 33:3,12; சங் 63:3; 146:8; ஏசா 38:17; எரே 31:3; யோவா 3:16;14:21,23; 16:27; 17:10,23,26; ரோம 5:8; 2கொரி 13:11; எபே 2:4; கொலோ 3:14; 1யோவா 3:1; 4:8-19; மத் 5:43-48; 19:19; யோசு 22:5; சங் 91:14; யோவா 13:14,15,34,35; 15:12-19**

**கோபுர வாசிப்பு : Z ’02, 171 (R 3020).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் என்னைத் தேவனுடைய அன்பிலே காத்துக்கொண்டேனா? எப்படி? ஏன்? எந்தச் சந்தர்ப்பங்களில்? அதில் உதவியாயிருந்ததும் பிரதிகூலமாயிருந்ததும் எவை? அதன் பலன் என்ன?**